**பாடம்: தமிழ் இரண்டாம் தாள் காலாண்டுத் தேர்வு – 2019 மதிப்பெண்கள்:100**
**வகுப்பு: பத்தாம் வகுப்பு காலம் : 2.30 மணிகள்**

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' தொடரில் இடம் பெற்றுள்ள பாடல்
அ) பாடிய கேட்டவர் ஆ) பாடல் பாடிய இ) கேட்டவர் பாடிய ஈ) பாடல் பாடிய
2. பொருத்துக:
   1. கண்ணன் - அ) பொது மொழி
   2. மலர் வீட்டுக்குச் சென்றாள் - ஆ) தனி மொழி
   3. வேங்கை - இ) தொடர் மொழி

அ) 1-இ 2-அ 3-ஆ ஆ) 1-அ 2-இ 3-ஆ இ) 1-ஆ 2-இ 3-அ ஈ) 1-இ 2-ஆ 3-அ
3. பொருந்தாதவற்றைக் கண்டுபிடி:
அ) தட்டு ஆ) கேடு இ) உரை ஈ) அடி
4. பகாப்பதச் சொல்லினைத் தேர்ந்தெடுக்க.
அ) கண் ஆ) படித்தான் இ) நடத்தல் ஈ) நடவாமை
5. 'மதுரை சென்றார்' - இத்தொடரில் அமைந்துள்ள வேற்றுமைத் தொகை எவ்வகை வேற்றுமைத் தொகைக்கு பொருந்தும்? அ) மூன்றாம் வேற்றுமைத் தொகை ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை
இ) ஐந்தாம் வேற்றுமைத் தொகை ஈ) ஆறாம் வேற்றுமைத் தொகை
6. இருபெயரொட்டுப் பண்புத் தொகைக்கான சொல்
அ) மலர்க்கை ஆ) அண்ணன் தம்பி இ) மார்கழித்திங்கள் ஈ) தேர்ப்பாகன்
7. 'பெரிய மீசை சிரித்தார்' – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை யாது?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
8. தொகாநிலைத் தொடரின் வகைகள் அ) 6 ஆ) 7 இ) 8 ஈ) 9
9. அறிஞருக்கு நூல் அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
10. விளியுடன் எதுத் தொடர்வது விளித்தொடர் ஆகும்?
அ) பெயர் ஆ) வினா இ) வினை ஈ) இவற்றில் எதுவுமில்லை
11. …………… உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்கள் ஆகும்.
அ) உவம ஆ) வேற்றுமை இ) பண்பு ஈ) வினை
12. இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ………….. எனப்படும்.
அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) வழாநிலை
13. செழியன் வந்தது என்பது ……. அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) வழாநிலை
14. ஸ்மார்ட் போன் என்பதற்கு இணையான தமிழ்ச்சொல் ……………..
அ) திறன்பேசி ஆ) தொலைபேசி இ) அலைபேசி ஈ) செல்பேசி

## பகுதி – 2
## பிரிவு – 1

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளி:**

15. கட்டு சொட்டு வழிபாடு கேடு கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.
16. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
அ) நாற்றிசையும் செல்லாத நாடில்லை. ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
17. நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எழுதுக.

அ) கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வூாடைக் காற்று வீசியது.

ஆ) நின்றுவிட்ட மழை தரும் குளிர்: சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீா பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.

18. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) கீரிபாம்பு ஆ) மலை வாழ்வார்

19. கலைச் சொல் தருக:

அ) Folk literature ஆ) Epic literature

20. சொற்களை இணைத்துப் பொருத்தமான தொடரை உருவாக்குக.

தேன் பொன் மழை விலங்கு

21. மரபுத் தொடர்களுக்கான பொருளறிந்து தொடரில் அமைக்க.

அ) வாழையடி வாழையாக ஆ) கண்ணும் கருத்தும்

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்தனுக்கு விடையளி: (வினா 28க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்)**

22. வழாநிலை எத்தனை வகைப்படும்? ஆவை யாவை?
23. தொடர்மொழி என்றால் என்ன? சான்று தருக.
24. தொகாநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? ஆவை யாவை?
25. பாரதியார் கவிஞர் நூலகம் சென்றார் அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பெயர்கள் யாவை?
26. வினைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.
27. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்குமுள்ள வேறுபாடகள் யாவை?
28. வந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – 3

## பிரிவு 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி:**

29. உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
30. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
ஏ கதனிற் கூரிய தில். - அலகிட்டு வாய்பாடு தருக.
31. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினான். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

## பிரிவு 2

**எவையேனும் நான்கனுக்கு விடையளி: (37 வது வினாவிற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்)**

32. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்கேற்ற விடையளி:

ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
“ஏழைமை வேடன் இறந்திலன்” என்று எனை ஏசாரோ?

வினாக்கள்:
1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?
2. இப்பாடலை இயற்றிய ஆசிரியர் யார்?
3. “ஏழைமை வேடன் இறந்திலன்”,இக்கூற்றுக்கு உரியவர் யார்?

4. இப்பாடலில் அமைந்துள்ள சீர் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

5. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

33. அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

| வேர்ச்சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | | அருணாவிற்காக ஓடினாள் |
| வா | குழந்தை வந்தது | | | குழந்தையே வா | |

34. பின்வருவனவற்றிற்கு விடையளி

அ) இமயமலை மிகவும் அழகாக உள்ளது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக)

ஆ) ஊர்களின் மரூஉச் சொற்களை எழுதுக. கும்பகோணம்

இ) பதினெட்டு – தமிழெண்ணுருவை எழுதுக.

ஈ) தமிழ்த்தேன் - உருவகத்தை உவமையாக மாற்றுக.

உ) மலரும் மணமும் போல – உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

35. படத்தைப் பார்த்துக் கவிதையைத் தொடர்க.

36. பின்வருவனவற்றுக்கு விடையளி:

அ) அத்தி பூத்தாற்போல ஆ) வேலியே பயிரை மேய்ந்தது போல ஆகிய உவமைகளுக்கேற்ற பொருள் எழுதுக.

இ) பழமொழியை நிறைவு செய்க: விருந்தும் ………………………..

ஈ) Art is long and life is short. உ) Familiarity breeds contempt.

37. பாடலின் இலக்கிய நயத்தை உணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி:

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வாதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
மாந்தருக் கிருகிணா வயங்குநண் மொழியே
தானனி சிறுப்புறுந் தனித்தமிழ் மொழியே
தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே - கா. நமச்சிவாயர்

அ) பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.

ஆ) பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.

இ) பாடலில் இடம்பெற்றுள்ள இயைபு நயத்தை எழுதுக.

ஈ) பாடலில் கவிஞர் உணர்த்தும் மையக்கருத்து யாது?

உ) பாடலில் இடம்பெற்றுள்ள சந்த நயத்தை எழுதுக

**பிரிவு 3**

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி:**

38. வண்ணச்சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.

அ) **பழகப் பழகப்** பாலும் புளிக்கும். ஆ) **வந்தார் அண்ணன்.**

இ) **வடித்த கஞ்சியில்** சீலையை அலசினேன். ஈ) அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது.

உ) மேடையில் **நன்றாகப் பேசினான்.**

39. உன்னுடைய பள்ளி ஆண்டுவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்க.

40. தொடரைப் படித்து விடையைக்கண்டறிக.

அ) நூலின் பயன் படித்தல் எனில் கல்வியின் பயன் …………

ஆ) குரலில் இருந்து பேச்சு எனில் விரலில் இருந்து …………..

இ) மீன் இருப்பது நீரில் தேன் இருப்பது

ஈ) விதைக்குத் தேவை எரு எனில் கதைக்குத் தேவை
உ) கல் சிலை ஆகுமெனில் விரலில் இருந்து

**பிரிவு – 4**

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:

41. மொழிபெயர்க்க:

1) Education is what remains after one has forgotten what one has learned in School – Albert Einstein.

2) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going.

42. கொடுக்கப்பட்டுள்ள சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

1. மாணவரின் பெயர்:
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் பாதுகாவலர் பெயர்:
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள்:
9. இறுதியாக படித்த பள்ளியின் முகவிரி:
10.

| தேர்வின் பெயர் | புதிவெண்-ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

11. மாற்றுச்சான்றிதழ் இணைக்கப்பட்டு உள்ளதா:
12. தாய்மொழி:
13. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும்

இடம்: மாணவரின் கையொப்பம்
தேதி பெற்றோர் கையொப்பம்

**பகுதி – 4**

**விரிவாக விடையளி:**

43. கட்டுரை வரைக.

குமரிக் கடல்முனையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும் எழில்சார் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு பிள்ளைத்தமிழ் பேசி சதகம் சமைத்து பரணிபாடி கலம்பகம் கண்டு உலா வந்து அந்தாதி கூறி கோவையாத்து அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.

இக்கருத்தை மையமாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

44. மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் வெற்றிபெற்ற உன் நண்பனைப் பாராட்டி வாழத்து மடல் ஒன்று வரைக.

45. உணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருப்பதைக் குறித்து பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் வரைக.

46. விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் என்ற தலைப்பில் கட்டுரை வரைக.